அடையாள இலக்கம்:

□ □ □ □ □ □

**அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து**
**தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2009**

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி – பகுதி 1

**<u>அதிமேற்பிரிவு</u>**
(13-17 வயதுப் பிரிவு)

காலம்: மு.ப. 9.30 மணி, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : 2.15 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிக 10 நிமிடங்கள் வழங்கப்படும்

அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பிரித்து எழுதுக.

*புள்ளிகள்: 5*

1. ஆதரவற்றவன் = ____________________ + ____________________
2. பாற்குடம் = ____________________ + ____________________
3. நாட்டுக்கொடி = ____________________ + ____________________
4. மனமிரங்கி = ____________________ + ____________________
5. வயிற்றுநோய் = ____________________ + ____________________

| புள்ளிகள் | |
|---|---|

ஆ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைச் சேர்த்து எழுதுக.

*புள்ளிகள்: 5*

1. பட்டு + ஆடை = ________________________
2. நீர் + ஊற்று = ________________________
3. தன் + நம்பிக்கை = ________________________
4. பெண் + இனம் = ________________________
5. நாட்டியம் + கலை = ________________________

| புள்ளிகள் | |
|---|---|

**இ) கீழே தரப்பட்ட வாக்கியத்தில் கோடிடப்பட்டுள்ள இடங்களில் பொருத்தமான சொல்லை கோடிட்ட இடத்தில் எழுதி வாக்கியத்தைப் பூர்த்தி செய்க.**

*புள்ளிகள்: 20*

1. அவுஸ்திரேலியாவில் பல இன மக்கள் ________________________ ஒற்றுமையாக வாழ்கின்றனர்.

2. காற்பந்தாட்டப் போட்டியைக் காண மக்கள் ________________________ சென்றார்கள்.

3. தாய் தன் குழந்தையைக் ________________________ போல வளர்த்து வந்தார்.

4. எம்மிலும் பார்க்க வயதிற் குறைந்த சகோதரியை நாம் ________________________ என அழைக்கின்றோம்.

5. சான்றோர்கள் உலகில் ________________________ நிலவ வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

6. அரசன் இட்ட ________________________ மந்திரி நிறைவேற்றினான்.

7. மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன ________________________ என்று அழைக்கப்படும்.

8. பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் என்பவற்றை ________________________ என அழைப்பார்கள்.

9. மெல்போர்ண் நகரில் பல வீடுகள் ________________________ அழிக்கப்பட்டன.

10. வீட்டுக்கு வருகைதரும் அன்பர்களுக்கு ________________________ கூறி வரவேற்பது தமிழரின் பண்புகளில் ஒன்றாகும்.

| **புள்ளிகள்** | |
|---|---|

**ஈ) கீழே கோடிடப்பட்ட சொற்களுக்கு மிகப் பொருத்தமான <u>ஒத்தகருத்துள்ள</u> சொல்லை அடையாளங்கண்டு கோடிட்ட இடத்தில் எழுதுக.**

*புள்ளிகள்: 10*

1. சில நாடுகள் இலங்கை அகதிகளுக்குப் <u>புகலிடம்தர</u> மறுத்துள்ளது.
   1. காணிகள் 2. வீடுகள்
   3. அடைக்கலம் 4. கடவுச்சீட்டு

______________________________

2. ஆசைகளை ஒரு <u>வரம்பிற்குள்</u> வைத்திருப்பது நல்லது.
   1. ஒழுக்கத்திற்குள் 2. முறைக்குள்
   3. கட்டுப்பாட்டிற்குள் 4. தேவைக்குள்

______________________________

3. படிப்பில் <u>நாட்டம்</u> இல்லாமல் போனாலும் ஒழுக்கம் தவறக்கூடாது.
   1. விருப்பம் 2. நோக்கம்
   3. ஆராய்ச்சி 4. பார்வை

______________________________

4. நம்முடைய <u>ஆற்றல்</u> சில சமயங்களில் நமக்கே தெரியாமல் போவதுண்டு.
   1. சோம்பல் 2. ஆர்வம்
   3. திறமை 4. பெருமை

______________________________

5. வெற்றியெனும் கதவைத்திறக்கும் <u>திறவுகோலாய்</u> முயற்சி விளங்குகிறது.
   1. பாதையாய் 2. பூட்டாய்
   3. வழியாய் 4. சாவியாய்

______________________________

6. தாய்நாட்டைப் பாதுகாப்பதே குடிமகன் ஒருவனின் <u>தலையாய</u> கடமையாகும்.
   1. உயர்ந்த 2. அன்பு
   3. முதன்மையான 4. முதல்

______________________________

7. என் வெற்றிக்குத் <u>தூண்டுகோலாய்</u> அமைந்தவர் என் ஆசிரியர்.
   1. வழியாக 2. முதலீடாக
   3. பயனாக 4. உந்துதலாக

______________________________

8. திருவள்ளுவர் உயிரைக் காட்டிலும் ஒழுக்கத்தை <u>ஓம்பச்</u> சொன்னார்.
   1. விரும்ப 2. பேண
   3. பின்பற்ற 4. வளர்க்க

______________________________

9. நாச்சியார் தான் <u>தொடுத்த</u> பூமாலையைத் தனக்கே சூட்டிக் கொண்டார்.
   1. கட்டிய 2. செய்த
   3. சேர்த்த 4. பறித்த

______________________________

10. கும்பகர்ணனின் <u>உறக்கம்</u> ஆறுமாதகாலம் நீடித்ததாம்.
   1. வினை 2. பொறுமை
   3. இரக்கம் 4. தூக்கம்)

______________________________

| புள்ளிகள் | |
|---|---|

**உ) கீழே கோடிடப்பட்ட சொற்களுக்கு மிகப் பொருத்தமான <u>எதிர்க்கருத்துள்ள</u> சொல்லை அடையாளங்கண்டு கோடிட்ட இடத்தில் எழுதுக.** ***புள்ளிகள்: 10***

1. எமக்குத் தாகமாக இருக்கும்போது நாம் **<u>தண்ணீரைக்</u>** குடிக்க விரும்புவோம்.

| | |
|---|---|
| **1. வெந்நீர்** | **2. பன்னீர்** |
| **3. கண்ணீர்** | **4. சுவைநீர்** |

__________________________

2. சில மலர்களிலிருந்து **<u>துர்நாற்றம்</u>** வீசுவதும் உண்டு.

| | |
|---|---|
| **1. நறுமணம்** | **2. திருமணம்** |
| **3. வசம்பு** | **4. மறுமணம்** |

__________________________

3. கடவுளைத் தூற்றும் **<u>நாத்திகனையும்</u>** தன் வசமாக்கவல்லது இசைக்கலை ஆகும்.

| | |
|---|---|
| **1. முரடனையும்** | **2. பூசாரியையும்** |
| **3. ஆத்திகனையும்** | **4. துறவியையும்** |

__________________________

4. தமிழறிவுப் போட்டியிற் கலந்து கொள்ளும் பிள்ளைகளுக்கு நாம் **<u>ஆதரவு</u>** கொடுக்க வேண்டும்.

| | |
|---|---|
| **1. நிராகரிக்க** | **2. பாராட்ட** |
| **3. புறக்கணிக்க** | **4. அநாதரவு** |

__________________________

5. என்றாவது ஒரு நாள் நாம் உயர்ந்த நிலையை அடைவோம் என்ற **<u>நம்பிக்கை</u>** நமக்கு இருக்கவேண்டும்.

| | |
|---|---|
| **1. அவநம்பிக்கை** | **2. சுயநம்பிக்கை** |
| **3. தன்னம்பிக்கை** | **4. திடநம்பிக்கை** |

__________________________

6. ஒருவரைப்பார்த்துப் **<u>புகழ்ச்சியாகக்</u>** கூறும்பொழுது மனப்பக்குவம் அடைந்தவர்கள் அவற்றை மனதிற் கொள்ளமாட்டார்கள்.

| | |
|---|---|
| **1. உயர்வாக** | **2. கோவமாக** |
| **3. இகழ்ச்சியாக** | **4. அன்பாக** |

__________________________

7. குறுகிய காலத்தில் சூர்யா எப்படி இந்நிலைக்கு உயர்ந்தான் என்பது பரம **<u>இரகசியம்.</u>**

| | |
|---|---|
| **1. ஆற்புதம்** | **2. நம்பிக்கை** |
| **3. பகிரங்கம்** | **4. துணிவு** |

__________________________

8. நாதன் பார்ப்பதற்குக் கர்வம் கொண்டவர்போல் தோன்றினாலும் **<u>மென்மையான</u>** இயல்புகளைக் கொண்டவர்.

| | |
|---|---|
| **1. சாந்தமான** | **2. வன்மையான** |
| **3. பண்பான** | **4. கலகலப்பான** |

__________________________

9. மனிதர்களது வாழ்வில் <u>இளமைக் காலம்</u> வேகமும் சுறுசுறுப்பும் உடையது.

| | |
|---|---|
| 1. முதுமைக்காலம் | 2. குழந்தைப்பருவம் |
| 3. படிக்கும் காலம் | 4. வேலைசெய்யும் காலம் |

__________________________

10. தவறு செய்யாமல் குற்றம் சுமத்தப்பட்ட **<u>நிரபராதி</u>** தண்டிக்கப்பட்டான்.

| | |
|---|---|
| **1. திருடன்** | **2. கைதி** |
| **3. போக்கிரி** | **4. குற்றவாளி)** |

__________________________

| **புள்ளிகள்** | |
|---|---|

அடையாள இலக்கம்:

☐ ☐ ☐ ☐ ☐ ☐

**அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து**
**தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2009**

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி – பகுதி 2

<u>அதிமேற்பிரிவு</u>
(13-18 வயதுப் பிரிவு)
காலம்: மு.ப. 9.30 மணி, ஞாயிற்றுக்கிழமை

**ஊ) பின்வரும் ஒவ்வோரு சொல்லையும் கொண்டு அதன் பொருள் விளங்கக்கூடியதாகச் சரியான வசனம் அமைத்து எழுதுக.**

***புள்ளிகள் : 20***

1. பலம் : ______________________________

______________________________

2. பழம் : ______________________________

______________________________

3. அரை : ______________________________

______________________________

4. அறை : ______________________________

______________________________

5. கூரிய : ______________________________

______________________________

6. கூறிய : ______________________________

______________________________

7. கரை : ______________________________

______________________________

8. கறை : ______________________________

______________________________

9. குறை : ______________________________

______________________________

10. குரை : ______________________________

______________________________

| புள்ளிகள் | |
|---|---|

**எ) பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்தபின், கீழ்க் காணும் வினாக்களுக்கு விடை தருக.**

***புள்ளிகள் : 15***

நாம் வாழும் காலம் சிக்கலான காலம். இக்காலத்தில் அன்புடைய பெற்றோர்களுக்குத் தங்கள் பிள்ளைகளோடு நெருங்கிப் பழகி அவர்களை வளர்ப்பதற்குரிய வாய்ப்புகள் குறைவு. அவர்களுக்கு வெவ்வேறு கடமைகள் மிகுந்துவிட்டன. வீட்டிலிருக்கும் நேரம் குறைந்துவிட்டது. ஆகவே தாம் பெற்ற மக்களின் உள்ளத்தோடு இயைந்து வாழ்ந்து அவர்களைப் பண்படுத்த முடிவதில்லை. கல்விக் கூடங்களில் உள்ள ஆசிரியர்களும் மாணவர்களோடு உள்ளம் இயைந்து பழக முடியாத காலம் இது. மாணவர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது, பாடங்களும் பெருகி வருகின்றன. மணிக்கணக்குப் பார்த்து வகுப்புகளை இயந்திரம் போல் நடத்தி முடிக்க வேண்டிய நிலை உள்ளது. கல்வி கற்பதற்காக மாணவர்களையும் வேலைக்காக ஆசிரியர்களையும் கல்விக் கூடங்கள் ஒன்று சேர்க்கின்றன. அதனால் மாணவர்களின் மனத்தைப் பண்படுத்தும் ஆற்றல் ஆசிரியர்களுக்கு ஒரு சவாலாகவே இருக்கிறது.

நல்ல நூல்கள் ஓரளவிற்குப் பயன் விளைவித்து வந்தன. இன்று நூல்கள் மிகப் பரவலாகப் பல்கிப் பெருகிவிட்டன. சிலவற்றை ஆழ்ந்து படித்து அவற்றையே நம்பிப் பயன்பெற்ற பழங்காலம் போய்விட்டது. நூல்கள் பெருகிவிட்டமையால் பலவற்றை மேற்போக்காகப் படிப்பதற்கே நேரம் உள்ளது. இதனால் நல்ல நூல்களுக்கும் மனங்களுக்கும் இடையுள்ள தொடர்பு குறைகிறது. படித்து மறப்பதற்கு என்றே கவர்ச்சியான வார இதழ்கள் போன்றவை வெளிவருகின்றன. அவற்றின் பயன் நெஞ்சில் ஆழப் பதியாது அந்தந்த வாரத்தோடு முடிந்து போகிறது. வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் நிகழ்ச்சிகளின் பயனும் மக்களிடையே நிலைத்து நிற்பதில்லை. இவை அனைத்தும் வளரும் மனத்திற்குப் பரபரப்பையும் வேகத்தையும்

தந்து பொழுதுபோக்கு அம்சமாக இருக்கின்றனவே தவிரப் பண்பாடு வளரப் பயன்படுவதில்லை.

தற்காலத்தில் திரைப்படத் தயாரிப்பாளர்கள் பணம் ஈட்டுவதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். பல இலட்சக் கணக்கான பணத்தை முதலீடு செய்யும் தயாரிப்பாளர்கள் பலர் அறக்கருத்துகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் திரைப்படங்களிற் காட்டத் தயங்குகின்றனர். சிற்றின்பக் காட்சிகளையும் பாலியற் கவர்ச்சிகளையும் கூடுதலாகச் சேர்த்துப் பார்ப்பவரைத் தற்காலிக மகிழ்ச்சியில் ஆழத்துவதிலேயே இவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். வளரும் குழந்தைகளுக்கு ஏற்ப நல்ல படிப்பினைகள் கொண்டதும் நல்லொழுக்கப் பண்புகளை வளர்க்கக் கூடியதுமான படங்கள் வெளிவருவது குறைவு. இதனால் இக்காலத்தில் வெளிவரும் படங்கள் பொழுதுபோக்கிற்கு ஏதுவாக உள்ளனே தவிர நற்பண்புகளை வளர்ப்பதற்கும் அறிவை வளர்ப்பதற்கும். உகந்தவை அல்ல என்பது அறிஞரின் கருத்து. மனக்கட்டுப்பாடு இல்லாதவர்கள் இவை போன்ற திரைப்படங்களால் நெறி தவறுவதற்குத் தூண்டப்படுகிறார்கள். பின்பு அவர்களைத் திருத்துவது கடினமாகின்றது.

இன்று போக்குவரத்து வசதி மிகுந்துவிட்டமையால் உலகம் ஒரு சிறு நாடு போலாகிவிட்டது. ஆகவே சிலரோடு நெருங்கிப் பழகும் பழைய வாழ்வு மறைந்துவிட்டது. எல்லாவற்றிற்கும் மேலாகப் பலரோடு மேற்போக்காகப் பழகும் புதிய வாழ்வு பெருகியுள்ளது. இயந்திரங்களும் தொழிற்சாலைகளும் பெருகிவிட்டமையால் மக்களிடையே பரபரப்பு மிகுந்துவிட்டது. ஒரே நேரத்தில் பல இலட்சம் மக்களுக்குத் தகவல் சென்றடையக்கூடிய தொழில்நுட்பக் கருவிகளின் பெருக்கம் நம்மை மலைக்க வைக்கிறது. சிறுசிறு குழுக்களாகத் தொடங்கிய மனித இனம் இன்று பல்கிப் பெருகிவிட்டது. ஆனால், மனித உள்ளங்கள் மட்டும் மெலிந்துவிட்டன. ஆதலால் பண்பாட்டை வளர்க்க உதவும் நல்ல நூல்களை இன்றைய இளைஞர்கள் படித்துப் பயன்பெற வேண்டும். அதுவே சமுதாய மாறுதல்களால் மனித மனம் இயந்திரமாக மாறுவதைத் தடுக்கும், மனிதன் பண்பாட்டோடு வாழ வழி வகுக்கும்.

1. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பண்புடையவர்களாக வளர்ப்பதற்கு எவை தடையாக உள்ளன?

2. இன்றைய சூழலில் மாணவர்களின் மனங்களைப் பண்படுத்த விரும்பும் ஆசிரியர்களுக்குச் சவாலாக இருப்பவை எவை?

3. ஒருவர் ஏன் நூல்களை ஆழ்ந்து படிக்க வேண்டும்?

4. திரைப்படங்கள் என்னென்ன சிறப்புகளைக் கொண்டிருக்க வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

5. ‘ஆனால் மனித உள்ளங்கள் மட்டும் மெலிந்துவிட்டன.’ இறுதிப் பத்தியில் இடம் பெற்றுள்ள இவ்வாக்கியம் உணர்த்தும் கருத்து யாது?

6. கீழ்க்காணும் சொற்கள் மேலே தரப்பட்ட பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவற்றிற்கு ஒத்த பொருளுடைய சொற்களை எழுதுக.

இயைந்து : ____________

ஆற்றல் : ____________

குறிக்கோளாக : ____________

மாறுதல்கள் : ____________

நூல்கள் : ____________

| புள்ளிகள் | |
|---|---|

**ஏ) கீழே தரப்பட்டுள்ளவற்றில் ஒரு தலையங்கத்தைத் தேர்ந்தெடுத்து 200 சொற்களுக்கு மேற்படாமல் ஒரு சிறு கட்டுரை எழுதுக.**

***புள்ளிகள் : 15***

1) நான் விரும்பும் ஒரு உலகத் தலைவர் பற்றி .......

2) இன்றைய பொருளாதாரச் சரிவு உலகத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களைப் பற்றி கட்டுரை எழுதுக.

| புள்ளிகள் | |
|---|---|

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|